பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 07 2024 7 15
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கார்கில் போரில் போரிட்ட வீரர்கள் அனைவருக்கும் இன்றைய வெற்றி தினத்தில் மரியாதை செலுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், சீன வெளியுறவு அமைச்சர் திரு. **Wang Yi**-ஐ லாவோசில் சந்தித்து இருதரப்பு உறவு குறித்து பேச்சு நடத்தினார்.

3. நீட் நுழைவுத் தேர்வு குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் புலனாய்வு தொடர்பாக ஊடகங்களில் தவறான செய்திகளைப் பரப்புவதை தவிர்க்க வேண்டும் என்று சிபிஐ அறிவுறுத்தியுள்ளது.

4. மும்பையில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்பதால் பொதுமக்கள் தேவையின்றி வெளியே வர வேண்டாம் என்று காவல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

5. ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

*-- இனி விரிவான செய்திகள் ----*

<<<<>>>>

கார்கில் வெற்றி தினத்தையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி கார்கில் போர் நினைவிடத்தில் இன்று மரியாதை செலுத்துகிறார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், ஒவ்வொரு இந்தியருக்கும் இன்றைய நாள் சிறப்பு மிக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் இந்நாளில் மரியாதை செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

கார்கில் செல்லும் தாம் இன்று 4 புள்ளி ஒரு கிலோ மீட்டர் தொலைவிலான **Shinkun La** சுரங்கப்பாதை திட்டத்தை தொடங்கி வைக்க உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், சீன வெளியுறவு அமைச்சர் திரு. **Wang Yi**-ஐ நேற்று லாவோசில் சந்தித்துப் பேசினார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இருதரப்பு உறவு குறித்து தாங்கள் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

எல்லைக் கோட்டுப் பகுதியில் விதிமுறையைக் கடைபிடிக்க வேண்டும் என்றும், முந்தைய ஒப்பந்தங்களை பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்ததாக திரு. ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

மகளிர் வளர்ச்சி குறித்து விவாதிப்பதற்கான இணையவழி கருத்தரங்கை மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் இன்று நடத்துகிறது.

இக்கருத்தரங்கில் பணியிடங்களில் மகளிர் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தொடக்கவுரை ஆற்றவுள்ளார்.

**webcast.gov.in/mwcd** என்ற இணையதளம் வாயிலாக இக்கருத்தரங்கில் இன்று காலை 11 மணிக்கு பங்கேற்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்திமோர்ச்சாவைச் சேர்ந்த திரு. **Lobin Hembrom,** பிஜேபியைச் சேர்ந்த திரு. **JP Patel** ஆகியோரின் சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ்

அம்மாநில சட்டப்பேரவைத் தலைவர் திரு. **Rabindra Nath Mahto** ரத்து செய்தார்.

அண்மையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா வேட்பாளருக்கு எதிராக ராஜ்மஹால் தொகுதியில் திரு. **Lobin Hembrom** போட்டியிட்டதை அடுத்து அவருடைய சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ரத்து செய்ய வேண்டும் என்று அக்கட்சித்தலைவர் திரு. சிபுசோரன் பரிந்துரை செய்திருந்தார்.

அதேபோல் பிஜேபி உறுப்பினர் திரு. ஜே.பி. பட்டேல் ஹசாரிபாக் மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டதை அடுத்து அவருடைய சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ரத்து செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. **Amar Kumar Bauri**-யும் பரிந்துரை செய்திருந்தார்.

<<<<>>>>

போதைப்பொருள் கடத்தி வந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஜெர்மனி நாட்டவரை புதுதில்லி சர்வதேச விமான நிலையத்தில் சிபிஐ கைது செய்தது.

தோஹாவில் இருந்து புதுதில்லி வந்தடைந்த அவரிடம் நடத்தப்பட்ட சோதனையில் சுமார் 6 கிலோ கிராம் போதைப் பொருளை அவர் மறைத்து எடுத்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக சி.பி.ஐ. கூறியுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ரயில்வே திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகளில் எவ்வித காலதாமதமும் கிடையாது என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ரயில்வே திட்டங்களுக்குத் தேவையான நிலங்களை கையகப்படுத்துவதில் தமிழக அரசு காலதாமதம் செய்து வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்ததாக சில நாளிதழ்களில் செய்தி வெளியானது தொடர்பாக அவர் இதற்கு பதிலளித்துள்ளார்.

ரயில்வே திட்டங்களுக்காக இரண்டாயிரத்து 443 ஹெக்டேர் நிலங்களை கையகப்படுத்த தமிழக அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எனவே ரயில்வே திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளில் மாநில அரசு தனி கவனம் செலுத்தி உரிய காலத்திற்குள் அவற்றை நிறைவு செய்யும் வகையில் விரைந்து செயலாற்றி வருவதாகவும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு மத்திய அரசு உரிய நிதி ஒதுக்கியுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்தும் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் தமிழகத்தில் மாமல்லபுரம், நீலகிரி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத் குறிப்பிட்டார்.

<<<<>>>>

இளநிலை மருத்துவ படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வு குறித்து சிபிஐ மேற்கொண்டு வரும் புலனாய்வு தொடர்பாக ஊடகங்களில் தவறான செய்திகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சிபிஐ வெளியிட்டுள்ள அறிக்கையில், இவ்வழக்கு தொடர்பாக 33 இடங்களில் இதுவரை சோதனை நடத்தப்பட்டு 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

இதுகுறித்த விசாரணையின்போது பல்வேறு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளது.

எனவே சிபிஐ விசாரணை குறித்த தவறான தகவல்களை வெளியிடுவதை ஊடகங்கள் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து பொதுமக்கள் தேவையின்றி வெளியே வர வேண்டாம் என்று அம்மாநில காவல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அவசர உதவி தேவைப்பட்டால் 1 0 0 அல்லது 1 1 2 என்ற உதவி எண்ணில் தொடர்புகொள்ளலாம் என்று தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே கனமழை காரணமாக மும்பையில் இருந்து புறப்பட வேண்டிய 8 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டது.

10 விமானங்கள் அருகே உள்ள விமான நிலையங்களுக்கு திருப்பிவிடப்பட்டது.

நிலச்சரிவு ஏற்பட்ட ராய்கட் - புனே பகுதியில் தாமினிகட் என்ற இடத்தில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குஜராத் மாநிலத்தின் வடக்கு மற்றும் மத்தியப் பகுதியில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சூரத், நவ்சாரி உள்ளிட்ட 4 தென் மாவட்டங்களில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று கூறியுள்ளது.

<<<<>>>>

கேரளாவில் நிஃபா வைரசால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 14 வயது சிறுவனுடன் தொடர்பில் இருந்த 8 பேருக்கு நோய்த் தொற்று இல்லை என்று மருத்து ஆய்வு முடிவில் தெரியவந்துள்ளதாக அம்மாநில சுகாதார அமைச்சர் திருமதி வீணா ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

மலப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காணொலி காட்சி வாயிலாக உரையாற்றிய அவர், நோய் அறிகுறி காரணமாக மஞ்சேரி மற்றும் கோழிக்கோடு மருத்துவக்கல்லூரிகளில் 2 பேர் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் இதுவரை 85 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த வீட்டுவசதித்துறை இணையமைச்சர் திரு. **Tokhan Sahu**, 118 லட்சம் வீடுகளை கட்டிக்கொடுப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இவற்றில் 114 லட்சம் வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதற்கான நிதியை மாநில அரசுகளுக்கு 3 தவணைகளாக மத்திய அரசு விடுவித்து வருவதாகவும் திரு. **Tokhan Sahu** கூறினார்.

<<<<>>>>

தேசிய கைத்தறி விருதுக்கு திண்டுக்கல் மாவட்டம் நல்லாம்பட்டியைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர் திரு. பாலகிருஷ்ணன் தேர்வாகியுள்ளார்.

பருத்தி ரக சேலை உற்பத்தி செய்ததற்காக அவர் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புதுதில்லியில் அடுத்த மாதம் நடைபெற உள்ள தேசிய கைத்தறி தினவிழாவில் அவருக்கு இவ்விருது வழங்கப்பட உள்ளது.

<<<<>>>>

ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

தம்புல்லாவில் பிற்பகல் 2 மணிக்கு தொடங்கும் முதல் போட்டியில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

இரவு 7 மணிக்கு தொடங்கவுள்ள மற்றொரு ஆட்டத்தில் இலங்கை – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

--------------

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழா இன்று இரவு 11 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக வில்வித்தை தரவரிசை சுற்றுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன.

இதில் ஆடவர் பிரிவில் இந்தியாவின் **Dhiraj Bommadevara, Tarundeep Rai, Praveen Jadhav** ஆகியோரைக் கொண்ட அணி 2013 புள்ளிகளுடன் 3வது இடத்தைப் பிடித்தது. இதன்மூலம் ஆடவர் குழு காலிறுதிக்கு முன்னேறியது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் தீரஜ் பொம்மதேவரா 4வது இடத்தையும், தருன்தீப் ராய் 14வது இடத்தைபுயம், பிரவீன் ஜாதவ் 39வது இடத்தையும் பிடித்தனர்.

மகளிர் குழுப் பிரிவிலும் இந்தியா ஏற்கனவே காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திண்டுக்கல் அணி இன்று மதுரை அணியை எதிர்கொள்கிறது.

திண்டுக்கல்லில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.15க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**